**விவசாய விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவகம் - 2023**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

விவசாய விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.
நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியற்ற அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ்ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிறுவகம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.
நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் இல்லையாயினும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாடு தொடர்பான தெளிவொன்றை பெற்றுக்கொண்டேன்.

- பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தால் வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமானதாகவும் உட்சேர்க்கப்பட்டுள்ளது என்றும் மற்றும் வெளிப்படுத்தல்கள் அடங்கிய நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்வைப்பும் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வின் விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிறுவகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிறுவகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிறுவகம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்களை சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5. சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 11 ஆம் பிரிவு மற்றும் 2013 ஜுன் 02 திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.2.2 பந்தி | நிறுவகத்தின் அனைத்து மிகை பணத்தை உரிய விடய அமைச்சரினதும் நிதி அமைச்சரினதும் முன் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளாமல் மீளாய்வாண்டில் ரூபா 80,000,000 மிகைப் பணம் முதலீடு செய்யப்பட்டிருந்தன. | . நிதி அமைச்சரின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டு நிலையான வைப்பில் முதலீடு செய்வது சிக்கலாக இருப்பதால் நிறுவன ஆளுகை சபை அங்கீகாரத்துடன் முதலீடு செய்யப்பட்டது. | நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2023 மார்ச் 29 ஆந் திகதியிட்ட SEC/2023/E/01 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் தனிப்பட்ட முற்பண தனிநபர் வருமான வரி (APIT) வழிகாட்டுதல் கோவை | 2023 ஏப்ரல் 01 முதல் 2023 திசெம்பர் 31, வரையிலான காலகட்டத்தில் பணிப்பாளர் சபையின் 114 சபை உறுப்பினர்கள் மற்றும் வெளி விரிவுரையாளர்களுக்கு உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு 2023 ஏப்ரல் 01 ஆந் திகதி முதல் 2023 திசெம்பர் 31 அஆந் திகதி வரையான காலப்பகுதிக்குரிய உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு தனிப்பட்ட முற்பண தனிநபர் வருமான வரி (APIT) செலுத்த வேண்டிய தொகை | இப்பிரச்சினையான நிலைமை தற்போது முகாமைத்துவ சபையினால் தீர்க்கப்பட்டு வெளி விரிவுரையாளர்கள் அவர்கள் சுயாதீன சேவை ((Independent service provider) வழங்குநர்களாக அச் சேவைத் துறைக்கு பொருந்தக்கூடிய 5% வரி சதவீதத்தை அவர்ககளிடமிருந்து (அறவிடுவதற்கு | சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ரூபா 5,199,310 ஆக இருந்த போதிலும், அது தவறாகக் கணக்கிடப்பட்டு ரூபா 573,323 மாத்திரமே செலுத்தப்பட்டிருந்தது, இதனால் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு ரூபா 4,625,987.00 வரி குறைவாக செலுத்தப்பட்டிருந்தது | நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | சுற்றறிக்கைகள்<br>--------------------------- | | | |
| i | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய PE/01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 3.2 ஆம் பந்தி | நிதியாண்டு முடிவடைந்து 05 மாதங்களுக்குள் நிறுவகத்தின் கணக்காய்வு அறிக்கையுடன் முன்னைய ஆண்டின் செயலாற்றல் உள்ளடக்கப்பட்ட வருடாந்த செயலாற்றல் உள்ளடக்கிய ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் முன் வைக்கப்பட வேண்டிய போதிலும் முன்னைய ஆண்டின் ஆண்டறிக்கை மீளாய்வாண்டின் இதுவரை பாராளுமன்றத்தில் முன் வைக்கப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | 2022 ஆம் ஆண்டிற்குரிய ஆண்டறிக்கை 2024.03.04 ஆந் திகதி கல்வி பாராளுமன்றத்திற்கு கையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது | சுற்றறிக்கை அறிவுறுத்தல் களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| ii | 2018 நவம்பர் 26 ஆம் திகதிய 15/2018 ஆம் இலக்க பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் சுற்றறிக்கை | பொது முயற்சிகள் திணைக்களம் மற்றும் திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாமல் ஊழியர் நலனபுரி முறையொன்றான ஊழியர் காப்புறுதி முறைமைக்காக 2020 ஆகஸ்ட் முதல் 2023 திசெம்பர் வரையிலான காலப்பகுதிக்காக ரூபா 717,000 தொகை நிறுவகத்தின் பங்களிப்பாக தேசிய காப்புறுதி நிதியத்திற்கு பங்களிப்பு செலுத்தப்பட்டிருந்தது. | 26/11/2018 ஆம் திகதிய 15/2018 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கைக்கு இணங்க, முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்துடன், ஊழியர் காப்புறுதித் திட்டத்திற்கான நிறுவனத்தின் பங்களிப்பு கொடுப்பனவு செய்யப்பட்டதாக | சுற்றறிக்கை அறிவுறுத்தல் களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2018 மே 18 ஆந் திகதிய UGC/L/2020 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு கடிதம் | அனைத்து பட்டப்பின் படிப்பு நிறுவனங்களின் முகாமைத்துவ சபையின் மொத்த அங்கத்துவம் அதிகபட்சமாக 11 உறுப்பினர்களாக இருக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அதற்கேற்றவாறு செயற்படாமல் 35 பேருடன் | இது தொடர்பாக பேராதனை பல்கலைக்கழக பேரவையிலும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்க தேவையான | சுற்றறிக்கை அறிவுறுத்தல் களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | கூடிய முகாமைத்துவ சபையொன்று நியமிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக, 2019 முதல் 2023 டிசம்பர் 31 வரையிலான காலப்பகுயில் முகாமைத்துவவ சபைக் கூட்டங்களில் 11 இற்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் பங்கேற்பதற்காக 37 கூட்டங்களுக்கு ரூபா 2,164,263.00 மேலதிகமான செலவினமொன்று செய்யப்பட்டது. | நடவடிக்கைகள் எடுக்கப்படும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 92,669,656 ஆன மிகையொன்றாக இருந்ததுடன் அதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 93,665,087 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 995,431 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இவ்வீழ்ச்சிக்கு 2022 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக மீண்டெழும் மானியம் கிடைக்காமை பிரதான காரணமாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதி நிறுவனங்களின் நிலையான வைப்புகளில் முதலீடு செய்வதில் சந்தை வட்டி விகிதங்களின் உள்ள வேறுபாடுகளைப் பற்றி கவனமாக இல்லாமல். கூறு விலைகளை அழைக்காமல் முன்னெச்சரிக்கையாக நடவடிக்கை எடுக்காமல் அதே வங்கியின் தானாக புதுப்பிக்கப்பட்டதால் 2022/2023 ஆம் ஆண்டில், நிறுவனத்திற்கு ஈட்டக் கூடியதாக இருந்த ரூபா 38,362,216.00 வட்டி வருமானத்தை நிறுவனம் இழந்திருந்தது. . | எப்போதும் முதிர்வடையும் போது அரச வங்கிகளில் விலைகோரல் கோரப்பட்டு உயர் வட்டியின் கீழ் முதலீடுகளை மேற்கொள்வதற்கு நிறுவகம் முயற்சி செய்துள்ளதாக . | ஆகக்கூடிய நலன்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (ஆ) | 2017 ஜூலை 28 ஆம் திகதிய 42 ஆம் இலக்க நிதிக்குழு தீர்மானத்தின் பிரகாரம் 02 ஆண்டு காலத்தினுள் விரிவுரையாளர்களால் கோரப்படாத விரிவுரை கட்டணங்கள் நிறுவனத்தின் வருமானமாக கருதி நடவடிக்கை எடுக்க வேண்டும் என தீர்மானிக்கப்பட்டிருந்த போதும் 2015/2016 ஆம் ஆண்டுகளுக்குரிய தீர்வு செய்யப்படாத ரூபா 8,585,313 ஆன விரிவுரையாளர் கட்டணங்கள் 8 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதும் | 2017 ஜூலை 28 ஆம் திகதிய 42 ஆம் இளக்க நிதிக்குழு தீர்மானத்தின் பிரகாரம் 02 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கோரப்படாத விரிவுரை கட்டணங்கள் நிறுவனத்தின் வருமானமாக இனம் காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக | நிதிக்குழு தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | வருமானத்துக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் 2020 முதல் 2023 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் செயற்படுத்த வேண்டிய பட்டபின் படிப்பு மற்றும் டிப்ளோமா 06 பாடநெறிகளுக்காக எந்தவொரு மாணவரும் பதிவு செய்யப்பட்டு இருக்கவில்லை. | நிறுவனத்தின் அனைத்து பட்டப்பின்படிப்பு பாடநெறிகளையும் மேவுகை செய்யும் வகையில் மேம்படுத்தல் நிகழ்ச்சிகள் செயற்படுத்தப்பட்ட போதும் சில பாடநெறிகளுக்காக காலரீதியில் விண்ணப்பங்கள் குறைவடைந்து இருந்ததாக | அனைத்து பாடநெறிகளுக்காகவும் ஆகக் கூடிய இயலளவுடன் மாணவர்களை அனுமதிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

**3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிறுவனத்தின் சுற்றுலா விடுதியில் இருந்து அறவிடப்படும் கட்டணங்கள் 2014 ஆம் ஆண்டிலிருந்தே செலவினங்களுடன் ஒப்பிடும் போது, அளவுரீதியாக திருத்தப்படாத காரணத்தினால் கடந்த 05 வருடங்களில் ஈட்டிய வருமானமான ரூபா 1,816,495.00 ஐ விட ரூபா 6,464,284 ஆன செலவினமொன்றை மேற்கொள்ள நேர்ந்திருந்தது. | மேலும் அதிலிருந்து கிடைக்கும் வருமானத்தை அதிகரிக்க கூடிய வழிகளை ஆராய்வதாக | செலவினத்திற்கு ஒப்பாக வருமானத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | .ரூபா 21,000,000 தொகையான கணக்கீட்டு மென்பொருள் முறைமையொன்றை நிறுவுவதற்காக தனியார் கம்பனியொன்றுடன் 2017 ஆகஸ்ட் 14 ஆம் திகதி ரூபா 2,100,000 இற்கு உடன்படிக்கையொன்று செய்யப்பட்டு ரூபா 1,050,000 தொகை முற்பணமாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் உடன்படிக்கை செய்யப்பட்ட காலம் முடிவடைந்து 06 வருடங்களுக்கு மேற்பட்டிருந்த போதும் கணனி முறைமை நிறுவப்பட்டிருக்கவில்லை. | மேலும்: 2014 ஆம் ஆண்டின் இறுதி வரையில் இக்கணக்கீட்டு முறைமை ஸ்தாபித்து பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட்டுள்ளதாக | கணினி முறைமை நடவடிக்கைகளை பூர்த்தி செய்து பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| ாக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முறையான இடமாற்ற கொள்கையொன்றின் பிரகாரம் உத்தியோகத்தர்கள் இடமாற்றம் செய்யப்படாமையால் 26 உத்தியோகத்தர்கள் 06 ஆண்டுகள் முதல் 39 ஆண்டுகள் வரையான காலப்பகுதியில் ஒரே இடத்தில் சேவையாற்றி வந்தனர். | அனைத்து பட்டப்பின் படிப்பு நிறுவனங்களும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுடன் நடைமுறையன்று தயாரித்து கொள்கை தீர்மானத்தின் பேரில் மிகவும் சிறந்த நடைமுறை ஒன்றை தயாரித்து செயல்படுத்தி உள்ளதாக முறையான இடமாற்றிக் கொள்கின்ற அன்றின் | முறையான இடமாற்ற கொள்கையொன்றின் பிரகாரம் உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட வேண்டும |